WEB COPY

**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி**

**அசல் வழக்கு எண். 163/2018**

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பி.ஆறுமுகம், மொழி பெயர்ப்பாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தி | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 06.09.2021

**வா.சா. 1 :–**

பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை :–

எனது அப்பா ஆரம்பப்பள்ளி ஆசிரியராக வேலை செய்தார். அந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டுவந்து கணேஷ் ரேடியோ என்ற பெயரில் ரேடியோ கடை வைத்தார். அதற்கு முன்பு ஜவுளி கடை வைத்தார். பின்பு ரேடியோ கடை வைத்தார். அவரது வாழ்க்கையில் கடைசிவரை ரேடியோ கடைதான் வைத்திருந்தார். எனது அப்பா ரேடியோ கடை வைத்துதான் அதிகமான சம்பளம் ஈட்டிவந்தார் என்றால் சரிதான். என்னுடைய மூத்த அண்ணன் எனது அப்பாவுடன் தொழிலில் இருந்தார். மற்ற அண்ணன்களும் ஒன்றாகவே என்

அப்பாவுடன் இருந்தார்கள். பெண்பிள்ளை என்ற அடிப்படையில் நான் இரண்டாவது பிள்ளை. என்னுடைய அக்கா ஈரோடுக்கு அருகிலுள்ள பள்ளிப்பாளையத்தில் திருமணம் செய்துகொடுக்கப்பட்டார் என்றால் சரிதான். வருடம் எனக்கு நினைவில் இல்லை. என்னுடைய திருமணம் 1984 ல் நடந்தது. கரூரில் என் கணவருடன் நான் குடும்பம் நடத்தி வருகிறேன். எனக்கு 2 பெண்கள், 1 பையன். எந்த ஆண்டு என் அப்பா உயில் எழுதினார் என்று எனக்கு தெரியாது. 2010 ல் ஒரு உயில் எழுதினார். நில விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. எனது அப்பா அம்மா பெயரிலும் சகோதரர்கள் ஜெகதீஸ்வரன் மற்றும் ஆறுமுகம் பெயரிலும் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். 2004 ல் ஈரோட்டில் உள்ள சொத்தை எனது பெயரிலும் எனது சகோதரிகள் பெயரிலும் உயில் மூலம் எழுதிவைத்தார் என்றால் சரிதான். 2010 ல் ஒரு உயில் எழுதும்போது ஈரோட்டில் உள்ள சொத்தைப்பொறுத்து மாற்றி எழுதிவைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் எனது அப்பா அந்த சொத்து எனக்கும் எனது அக்காவுக்கும்தான் எனது தங்கைக்கும் ஈரோடு சொத்தை எழுதிவைத்ததாக சொன்னார். எந்த வருடம் சொன்னார் என்று ஞாபகமில்லை. ஆனால் பேசும்போது சொன்னார். எனது தகப்பனார் நல்ல உடல்நிலையில் இருந்துவந்தார். 2010 க்கு பிறகு 06.04.2011 ல் எனது அப்பா அவரது பெயரில் ஒரு சொத்து வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்து வாங்கும்போது அவர் நல்ல உடல்நிலையில்

WEB COPY

தான் இருந்தார்என்றால் சரிதான். 2010 ல் எனது அப்பா புதிதாக உயில் எழுதும்போது 2004 ல் எழுதிவைத்த உயிலை ரத்து செய்துவிட்டார் என்று சொன்னால் நான் அதற்கு சம்மதிக்கமாட்டேன். எனது அப்பா வியாபாரத்தில் கிடைத்த வருமானத்தை வைத்துதான் சொத்துக்களை எல்லாம் வாங்கினார் என்றால் சரிதான். சொத்துக்களைப்பொறுத்து நமது பிள்ளைகளுக்கு பிற்காலத்தில் பிரச்சனை வரக்கூடாது என்பதற்காகதான் அவர் உயில் எழுதிவைத்தார் என்றால் சரிதான். பெண் பிள்ளைகளில் நான் மட்டும்தான் சொத்துக்காக வழக்கு நடத்துகிறேன். மற்ற சகோதரிகள் எவரும் இந்த வழக்கில் கலந்துகொள்ளவில்லை. எனது தகப்பனார் எழுதிவைத்த கடைசி உயில்படி எனக்கு எந்த சொத்தும் கிடைக்காது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2011 ல் கிரையம் வாங்கிய சொத்தை எனக்கும் எனது மற்ற 2 சகோதரிகளுக்கும் கொடுக்க எனது சகோதரர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றால் எனக்கு ஈரோடு சொத்துதான் வேண்டும். எனது அப்பா 2014 ல் இறந்தார். அதன்பிறகு ஒருமுறை திருச்சிக்கு வந்தேன். அப்போது எனது மூத்த அண்ணன் என்னிடம் ரேஷன்கார்டும், ஆதார் அட்டையும் வாங்கினார். ஈரோட்டு சொத்தை அப்பா எழுதிவைத்துள்ளார். அதை கிரையம் செய்து தருவதாக எனது அண்ணன் சொன்னார். எனது பெரிய அண்ணன் எனக்கும் எனது 2 சகோதரிகளுக்கும் கிரையம் வாங்கிய சொத்தை கிரையம் தருவதாக சொன்னார் என்றால் அவ்வாறு இல்லை. எனது தகப்பனார்

WEB COPY

கடைசிவரை எனக்கு எந்த விரோதமான செயலும் செய்யவில்லை. எனது அப்பா எனக்கு நிறைய செய்திருக்கிறார் என்றால் சரிதான். எனது அப்பா எழுதிவைத்த உயில்கள் அனைத்தும் சுயநினைவோடும் சுயசிந்தனையோடும் எழுதிவைத்த உயில்கள் என்று சொன்னால் எல்லா உயிலும் நன்றாக எழுதிவைத்தார். கடைசி உயில் நன்றாக எழுதவில்லை. கடைசி உயிலை எனது அப்பா எழுதவில்லை. அப்பா எழுதவில்லை என்பதற்கு ஏதேனும் சாட்சிகள் உள்ளதா என்றால் இல்லை. நான் எனது தகப்பனாரோடு நல்ல உறவாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் இறக்கும்வரை நல்ல நினைவோடு இருந்தார் என்று சொன்னால் கடைசி இரண்டு வருடம் சுயநினைவோடு இல்லை. இவ்வழக்கில் கோரியுள்ள பாகங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.

WEB COPY